தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

22.02.2013 A.M

## வேர்க்கடலையில் புரோடினியா நோய் தாக்குதல்50 சதவீத மானிய விலையில் பூச்சிக்கொல்லி மருந்து

வேர்க்கடலையில் புரோடினியா நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்த 50 சதவீத மானிய விலையில் பூச்சிக்கொல்லி மருந்து வழங்கப்படுகிறது.

இது குறித்து கடலூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் ஜெயக்குமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கடலூர் வட்டாரத்தில் பயிரிடப்பட்டுள்ள வேர்க்கடலையில் புரோடினியா தாக்குதல் ஆங்காங்கே தென்படுகிறது. இதை இளம் புழு பருவத்திலேயே கட்டுப்படுத்த வேண்டும். முட்டைகளில் இருந்து வெளிவரும் இளம் புழுக்கள் கூட்டமாக இலையின் பச்சையத்தை சுரண்டி உண்ணுகின்றன.

இதனால் இலைகள் பழுப்பு நிறமாக, கறுப்புப் புள்ளிகளுடன் காணப்படும். புரோடினியாவின் பொருளாதார சேதநிலை 2 செடிக்கு ஒரு புழு அல்லது வயலின் குறுக்கே 100 மீட்டர் தூரத்துக்குள் 8 மூட்டை தொகுதிகள் தென்பட்டால் ஓருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை பின்பற்ற வேண்டும்.

இப்புழுக்கள், ஆமணக்கு இலைகளை விரும்பி உண்பதால், பூச்சிகளின் தாக்குதலை அறிய வரப்பு ஓரங்களில் ஆமணக்கு நடலாம். இரவு 7 முதல் 11 மணி வரை விளக்கு பொறி வைத்து தாய் அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.

ஏக்கருக்கு 5 இனக்கவர்ச்சிப் பொறிகளை வைத்து ஆண் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிப்பதன் மூலம் பூச்சிகளின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் தடுக்கலாம்.

வயல்களில் காணப்படும் முட்டை குவியல்களையும், இளம் புழுக்களின் கூட்டத்தை சேகரித்து அழிக்கலாம்.

நச்சு தீனி தயாரித்து மாலை நேரங்களில் வயல்களில் இட்டு அழிக்கலாம். ரசாயன முறைப்படி புரோபனபாஸ், குளோர்பைரிபாஸ், மானேகுரோட்டோபாஸ் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை தண்ணீரில் கலந்து, காலையில் புழுக்கள் வெளிவரும் சமயத்தில் கைதெளிப்பான் கொண்டு தெளிக்கலாம்.

இதில் புரோனாபாஸ் பூச்சிக்கொல்லி மருந்து கடலூர் வேளாண் விரிவாக்க மையத்தில் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது.

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்:வேளாண் ஆணையர் ஆய்வு

உளுந்தூர்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை வேளாண்மை மற்றும் வணிகவரித்துறை ஆணையர் அனில் மேஸ்ராம், வியாழக்கிழமை நேரில் ஆய்வு செய்தார்.

அப்போது, இங்கு குடிநீர், கழிவறை வசதிகள், ஓய்வு அறை, தானியங்களை மாற்ற சாக்கு வசதி, மின்விளக்கு வசதி, பணம் பட்டுவாடா செய்யும் அறை உள்ளிட்ட வசதிகளை முழுமையாக செய்து தர வேண்டும் என ஆணையரிடம் விவசாயிகள், வியாபாரிகள் கோரிக்கை வைத்தனர். அதனை உடனடியாக செய்துதர விழுப்புரம் மாவட்ட விற்பனைக்குழு செயலருக்கு உத்தரவிட்டார்.

ஆய்வின்போது விழுப்புரம் மாவட்ட விற்பனைக்குழு செயலர் சண்முகம், ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சிவநேசன், வேளாண்மை அலுவலர் செந்தில் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## வேளாண் பல்கலை.க்கு தமிழ் அறிவுத் திருவிழா கோப்பை

கோவை குமரகுரு பொறியியல் கல்லூரியில் நடந்த தமிழ் அறிவுத் திருவிழாவில், நா.மகாலிங்கம் சுழற்கோப்பையை கோவை வேளாண் பல்கலைக் கழகம் வென்றது.

தமிழ் அறிவுத் திருவிழாவில் கருத்தரங்கம், கிராமிய நடனம், பேசும் தமிழ் உள்ளிட்ட 10 வகையான போட்டிகள் நடைபெறுகின்றன. இதில் மாநிலம் முழுவதும் இருந்து 70 கல்லூரிகளைச் சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பங்கேற்றனர்.

தொடக்க விழாவில் குமரகுரு பொறியியல் கல்லூரியின் இணைத் தலைவர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர் தலைமை தாங்கினார். கோவை வேளாண் பல்கலைக் கழக முன்னாள் முதன்மையர் ச.சதாசிவம், நவீன வேளாண்மையும் நமது உணவுத் தேவைகளும் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

கல்லூரி முதல்வர் ச.ராமச்சந்திரன், தமிழ் மன்றத் தலைவர் ச.தங்கசாமி, செயலர் கோபி ஆகியோர் உடனிருந்தனர்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து மூன்றாவது முறையாக கோவை வேளாண் பல்கலைக் கழக மாணவர் குழு, நா.மகாலிங்கம் சுழற்கோப்பையை வென்றது. கல்லூரி இணைத் தாளாளர் சங்கர் வாணவராயர், கோப்பையை வழங்கினார். வே.கார்த்திகேயன் நன்றி கூறினார்.

## "அட்மா' திட்ட ஆட்சி மன்ற குழுக் கூட்டம்

திருப்பூர் மாவட்ட வேளாண்மைத் துறை "அட்மா' திட்டத்தின் (2012-13 ஆம் ஆண்டு) ஆட்சி மன்ற குழுக் கூட்டம் ஆட்சியர் கு.கோவிந்தராஜ் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் முகமது கலிபுல்லா ஷெரீப் முன்னிலை வகித்தார். வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை பொறியியல், கால்நடை, வேளாண் விற்பனை, வணிகத்துறை அலுவலர்கள் மற்றும் அட்மா ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். "அட்மா' திட்டத்தில் வட்டார அளவில் காலியாக உள்ள தொழில்நுட்ப அலுவலர் பணியிடங்களை நிரப்புவது, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், திருப்பூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலக மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள அனுமதி கோருதல், திருப்பூர் மாவட்ட ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்கள் மற்றும் மேலாண்மைக் குழு உறுப்பினர்களில் அலுவல் சாரா பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்தல், திருப்பூர் மாவட்டத்தில் நடப்பு 2012-13 நிதியாண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பண்ணையம் இனத்தில் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் பட்டியலுக்கு ஒப்புதல் வழங்க கோருதல் உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தென்னை விவசாயிகள் அடையாள அட்டை பெற விண்ணப்பிக்கலாம்

தென்னை விவசாயிகள் அடையாள அட்டை பெற விண்ணப்பிக்கலாம் என ஆட்சியர் பொ. சங்கர் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: வேலூர் மாவட்ட தென்னை விவசாயிகளின் கோரிக்கைக்கு ஏற்ப தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மூலம் குடியாத்தம், வாணியம்பாடியில் தென்னை கொப்பரை கொள்முதல் நிலையம் அமைக்கப்பட உள்ளது.

விவசாயிகளிடமிருந்து தென்னைக் கொப்பரை கொள்முதல் தொடங்கும் முன் வேளாண்துறை மூலம் தென்னை விவசாயிகளுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்பட உள்ளது. முதல்கட்டமாக குறைந்தபட்சம் 50 சென்ட் பரப்பில் தென்னை சாகுபடி செய்துள்ள, காய்க்கும் பருவத்திலுள்ள நில உடைமையாளர்களுக்கு மட்டும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

அடையாள அட்டை பெறுவதற்குரிய விண்ணப்ப படிவங்கள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் இம்மாதம் 25ஆம் தேதி முதல் வழங்கப்படும். விண்ணப்பத்தை பூர்த்திசெய்து 2 பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

வேளாண்துறையினர் நேரடியாக ஆய்வுசெய்து அடையாள அட்டைகளை வழங்குவார்கள். அதில் விவசாயிகளின் சுய விவரங்கள், நில உடைமை விவரம், தென்னையின் ரகம், மரங்களின் எண்ணிக்கை, எதிர்நோக்கும் மகசூல் ஆகியவை இடம்பெற்றிருக்கும்.

அடையாள அட்டை வழங்கும் பணி நிறைவடைந்ததும் கொள்முதல் நிலையங்கள் செயல்படத் தொடங்கும் என்றார் அவர்.

## சிறுதானிய விவசாயக் கருத்தரங்கு

போளூர் வேளாண் துறை சார்பில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஊட்டமேற்றிய சிறுதானிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விவசாயக் கருத்தரங்கு ஜமுனாமரத்தூரை அடுத்த டான்போஸ்கோ உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் புதன்கிழமை நடைபெற்றது .

நிகழ்ச்சியில், வேளாண்மை அலுவலர் சித்ரா வரவேற்றார். திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சக்ரவர்த்தி சிறப்புரையாற்றினார். பின்னர் விவசாயிகளுக்கு சிறு தானியங்களை உற்பத்தி செய்யும் வழிமுறை குறித்த கையேட்டை வழங்கினார்.

போளூர் வேளாண்மை உதவி இயக்குநர் கண்ணகி, வேளாண் செயல் திட்டங்கள் குறித்துப் பேசினார். மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குநர் தேவிபர்வதம் தரமான விதைகளை உற்பத்தி செய்யும் முறைகள் குறித்து விளக்கினார்.

கருத்தரங்கில், நம்மியம்பட்டு, முட்நாட்டூர், கோவிலூர், மேல்நெல்மாத்தூர் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ளப் பகுதிகளைச் சேர்ந்த 100 விவசாயிகள் கலந்துகொண்டனர். ஜமுனாமரத்தூர் ஒன்றியக்குழுத் தலைவர் ராஜமாணிக்கம், மாவட்ட கவுன்சிலர் மணி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## நாமக்கல்லில் ரூ.80 லட்சத்துக்கு பருத்தி விற்பனை

நாமக்கல் வேளாண்மை கூட்டுறவு விற்பனை நிலையத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில் ரூ.80 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது. 5,500 பருத்தி மூட்டைகள் ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்தன.

நாமக்கல் - திருச்செங்கோடு சாலையிலுள்ள நாமக்கல் வேளாண்மை கூட்டுறவு விற்பனை நிலையத்தில் வாரம் தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடைபெறுகிறது. நாமக்கல் மட்டுமன்றி அருகிலுள்ள திருச்சி, சேலம், பெரம்பலூர் மாவட்டங்களிலிருந்தும் பருத்தி மூட்டைகள் இங்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 5,500 மூட்டைகள் வரப்பெற்றன.

மறைமுக ஏலம் மூலம் ஆர்சிஹெச் ரக பருத்தி, குவிண்டால் ரூ.3,800 முதல் ரூ.4,100 வரையும், டிசிஹெச் ரகம் ரூ.4,200 முதல் ரூ.5,100 வரையும், சுரபி ரகம் ரூ.5,200 முதல் ரூ.5,600 வரையும் ஏலம் போனது. மொத்தம் ரூ.80 லட்சத்துக்கு விற்பனை நடைபெற்றதாக கூட்டுறவு சங்க அலுவலர்கள் தெரிவித்தனர்.

ஆனால், கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ரூ.3,500 முதல் ரூ.4,200 வரையும், டிசிஹெச் ரகம் ரூ.4,800 முதல் ரூ.5,100 வரையும், சுரபி ரூ.5,300 முதல் ரூ.5,800 வரையும் விலை போயின.

கடந்த இரு வாரங்களாக மறைமுக ஏலத்தின் மூலமே, பருத்தி ஏலம் விடப்படுகின்றன. அதற்கு முன்பு வரை நேரடி ஏலம் அமலில் இருந்தது. விவசாயிகளுக்கு அதிக விலை பெற்றுத் தரவே இந்த மறைமுக ஏலம் நடத்தப்படுவதாக கூட்டுறவு சங்க அலுவலர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால், கடந்த 7-ஆம் தேதி நடைபெற்ற நேரடி ஏலத்தின்படி பருத்தி குவிண்டால் ஆர்சிஹெச் ரகம் ரூ.4,000 முதல் ரூ.4,500 வரையும், டிசிஹெச் ரகம் ரூ.4,500 முதல் ரூ.5,400 வரையும், சுரபி ரகம் ரூ.5,500 முதல் ரூ.6,000 வரையும் விலை போயுள்ளன.

நேரடி ஏல முறையை ஒப்பிடுகையில், கடந்த இரு வாரங்களாக நடைபெறும் மறைமுக ஏலத்தில் பருத்தி குவிண்டால் ரூ.200 முதல் ரூ.400 வரை குறைவாகவே விலை போயுள்ளன. இதனால் பெரம்பலூர், திருச்சி, சேலம் என வெளி மாவட்டங்களிலிருந்து பருத்தி மூட்டைகளை கொண்டு வந்திருந்த விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். அவர்கள் மறைமுக ஏல முறையை கைவிட்டு, நேரடி ஏலம் நடத்தி விவசாயிகளுக்கு அதிகளவில் பலன் கிடைக்க வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

## முட்டைக் கொள்முதல் விலை 3 காசுகள் உயர்வு

நாமக்கல் மண்டலத்தில் முட்டை பண்ணைக் கொள்முதல் விலை வியாழக்கிழமை மேலும் 3 காசுகள் உயர்த்தப்பட்டு,ரூ.3.73 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விலையேற்றம் காரணமாக, கடந்த மாதம் வட மாநிலங்களில் முட்டை நுகர்வு குறைந்து விலையிலும் சரிவு ஏற்பட்டது. இதையடுத்து, நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை குறைக்கப்பட்டது. அதன்படி, ஜனவரி 23-இல் ரூ.3.42ஆக இருந்த முட்டை விலை 24-ஆம் தேதி ரூ.3.20ஆக குறைக்கப்பட்டது. பின்னர், குளிர் காலம் தொடங்கியதால், தமிழகம், கேரள மாநிலங்களில் முட்டை விற்பனை அதிகரிக்கத் தொடங்கியது. இதைத் தொடர்ந்து, நாமக்கல் மண்டலத்திலும் முட்டைக் கொள்முதல் விலை உயரத் தொடங்கியுள்ளது.

கடந்த ஜனவரி 31-இல் ரூ.3.30, பிப்ரவரி 4-இல் ரூ.3.45, 7-இல் ரூ.3.55, 9-ஆம் தேதி ரூ.3.65 என படிப்படியாக உயர்ந்து, பிப்ரவரி 11-இல் வரலாறு காணாத அளவில் முட்டை விலை ரூ.3.70ஆக உயர்ந்தது. இதன் தொடர்ச்சியாக, வியாழக்கிழமை மேலும் 3 காசுகள் உயர்த்தப்பட்டு, முட்டை விலை ரூ.3.73ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சந்தை நிலவரம் சாதகமாக இருப்பதால் முட்டைக் கொள்முதல் விலை மேலும் உயர வாய்ப்புள்ளதாக, நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

பிற மண்டலங்களில் முட்டை விலை நிலவரம்:

சென்னை - ரூ.3.78, பெங்களூர் - ரூ.3.65, மைசூர் - ரூ.3.67, ஹைதராபாத் - ரூ.3.46, மும்பை - ரூ.3.79, விஜயவாடா - ரூ.3.47, கொல்கத்தா - ரூ.3.95, பர்வாலா - ரூ.3.77, தில்லி - ரூ.4.

## கிருஷ்ணகிரியில் இன்று கால்நடை மருத்துவ முகாம்

கிருஷ்ணகிரியில் விலையில்லா கறவை மாடுகள், ஆடுகளுக்கு மருத்துவ முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது.

தமிழக அரசின் சிறப்புத் திட்டங்களின் கீழ் பயனாளிகளுக்கு வழங்கிய விலையில்லா கறவை மாடுகள், ஆடுகளுக்கு குடல்புழு நீக்குதல் மற்றும் மருத்துவ பரிசோதனை முகாம் பையனப் பள்ளியில் நடைபெற உள்ளது.

வெள்ளி மற்றும் சனி ஆகிய இரு நாள்கள் நடைபெறும் இந்த மருத்துவ முகாமில், பயனாளிகள் தங்களது கறவை மாடுகள், ஆடுகளுக்கு இலவச பரிசோதனை செய்து பயனடையலாம் என்று கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## மானிய விலையில் ஜிப்சம் பெறலாம்

அரியலூர் மாவட்டம், ஜயங்கொண்டம், ஆண்டிமடம் வேளாண் விரிவாக்க மையங்களில் 50 சத மானிய விலையில் ஜிப்சம் வழங்கப்படுகிறது.

இதுகுறித்து வேளாண் உதவி இயக்குநர்கள் ஜயங்கொண்டம் நா. கலைச்செல்வி(பொ) ஆண்டிமடம் பா. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தெரிவித்தது:

ஜயங்கொண்டம், ஆண்டிமடம் வட்டாரப் பகுதிகளில் அதிகளவில் நிலக்கடலை பயிரிடப்படுகிறது. நிலக்கடலையில் அதிகம் பொக்கு இல்லாமல், திரட்சியான நிலக்கடலை பெறவும், அதிக மகசூல் எடுக்கவும் ஏதுவாக அடியுரமாக கடைசி உழவின்போது ஹெக்டருக்கு 200 கிலோ ஜிப்சமும், நிலக்கடலை பூக்கும் தருணமான விதைத்த 40 நாள் முதல் 45 நாட்களுக்குள் ஹெக்டருக்கு 200 கிலோ ஜிப்சமும் இட்டு, களையெடுத்து மண் அணைப்பது அவசியம். இதற்குத் தேவையான ஜிப்சம் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 50 சத மானிய விலையில் ஜயங்கொண்டம் மற்றும் வேளாண் விரிவாக்க மையங்களில் விநியோகிக்கப்படுகிறது. இதைப் பயன்படுத்தி விவசாயிகள் நிலக்கடலையில் அதிக மகசூல் பெற்று பயனடையலாம்.

## விலையில்லா ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம்

கரூர் மாவட்டத்தில் தமிழக அரசால் வழங்கப்பட்ட விலையில்லா ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம் வெள்ளிக்கிழமை முதல் இரு நாள்களுக்கு நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கரூர் மாவட்டத்தில் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில், கடந்தாண்டு 1,842 பயனாளிகளுக்கு 7,368 ஆடுகள் வழங்கப்பட்டன. 2012-13-ல் 39 ஊராட்சிகளில் 3,003 பயனாளிகளுக்கு 12,012 ஆடுகள் வழங்கப்பட்டன.

இந்த ஆடுகளின் எடை கூடும் வகையில் குட்டிகளின் இறப்பைத் தவிர்ப்பது, குட்டிகளுக்கு போதுமான அளவில் பால் கிடைப்பது உள்ளிட்ட காரணங்களுக்கான விலையில்லா ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம் பிப். 22,23-களில் 51 கிராமங்களில் நடைபெற உள்ளது. கரூர்

மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள விலையில்லா ஆடுகள் மூலம் 6,142 குட்டிகள் பிறந்துள்ளன. கடந்த ஆண்டைப் போலவே, இந்த ஆண்டும் விலையில்லா ஆடுகளைச் சிறப்பாகப் பராமரிக்கும் பயனாளிகளுக்கு அரசு சார்பில் பரிசுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

### மேட்டூர் அணை நீர்மட்டம்: 33.15 அடி

மேட்டூர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 33.15 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 3,886 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 600 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து கொள்ளிடத்தில் வினாடிக்கு 50 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாயில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

### நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்ட தேதி மாற்றம்

நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் நிர்வாகக் காரணங்களால் பிப். 27-ம் தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது என நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் பிப். 28-ம் தேதி நடைபெறும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது, நிர்வாகக் காரணங்களால் இந்தக் கூட்டம் பிப். 27-ம் தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதன்படி, புதன்கிழமை (பிப். 27) காலை 11 மணிக்கு மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறும். முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் கூட்டத்தில் பங்கேற்று கருத்துகளைத் தெரிவிக்குமாறு ஆட்சியர் தனது செய்திக் குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### விஜயநகரியில் விவசாயிகளுக்கு தென்னை மரம் ஏறும் பயிற்சி

கன்னியாகுமரியை அடுத்த விஜயநகரியில், விவசாயிகளுக்கு தென்னை மரம் ஏறும் பயிற்சி முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

விஜயநகரி பாரத் உழவர் மன்றம், நபார்டு வங்கி ஆகியவை சார்பில் இம் முகாம் நடைபெற்றது. பாரத் உழவர் மன்றத் தலைவர் மனோகரன் தலைமை வகித்தார். சேவாலய தொண்டு நிறுவன இயக்குநர் பெருமாள் முன்னிலை வகித்தார். பேச்சிப்பாறை தோட்டக்கலை ஆராய்ச்சி மைய அதிகாரி சுரேஷ் பேசினார்.

முகாமில் ராஜாவூரைச் சேர்ந்த சுரேஷ், கருவி மூலம் தென்னை மரம் ஏறுவது குறித்து செயல்விளக்கம் செய்து காட்டினார்.

மரம் ஏறுவதற்கும், கையாளுவதற்கும் எளிமையான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ள இக் கருவியின் விலை ரூ. 3 ஆயிரம் என தெரிவிக்கப்பட்டது.

### பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் இழப்பீடு முறையாக வழங்கவில்லை

தூத்துக்குடி மாவட்டத்தில் பயிர்ப் பாதுகாப்புக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முறையாக இழப்பீடு பணம் வழங்கப்படவில்லை என குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் குற்றம்சாட்டினர்.

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் ஆஷிஷ்குமார் தலைமை தாங்கினார். வேளாண்மைத் துறை இணை இயக்குநர் ரஞ்சித்சிங் தன்ராஜ், தாமிரவருணி வடிநிலக் கோட்ட செயற்பொறியாளர் முத்துப்பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டம் தொடங்கியதும் 4-வது பைப் லைன் திட்டத்தில் மருதூர் அணையில் இருந்து தண்ணீர் எடுப்பதற்குப் பதிலாக ஸ்ரீவைகுண்டம் அணையின் கீழ்பகுதியில் புதிதாக ஒரு தடுப்பு அணை அமைத்து கடலுக்கு வீணாகச் செல்லும் தண்ணீரைப் பயன்படுத்த வேண்டுமென விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் கே.பி. பெருமாள் பேசினார். இதனையே மற்ற விவசாயிகளும் வலியுறுத்தினர். இதற்குப் பதிலளித்து தாமிரவருணி வடிநிலக்கோட்ட செயற்பொறியாளர் முத்துப்பாண்டியன் பேசுகையில், இதுதொடர்பாக அரசுக்கு பரிந்துரைக் கடிதம் அனுப்பியுள்ளோம். நல்ல முடிவு கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

இதேபோல, விவசாயி கந்தசாமி பேசுகையில், தாமிரவருணி பகுதியில் அதிகாரிகள் துணையோடு மணல் திருட்டு நடைபெறுகிறது என்றும், நம்பிபுரம் ஊராட்சிக்குள்பட்ட வைப்பாறு பகுதியில் மணல் திருட்டை தடுக்க முயன்றபோது திருட்டில் ஈடுபட்டோர் தன்னை தாக்கியதாகவும் புகார் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்து ஆட்சியர் ஆஷிஷ்குமார் பேசுகையில், மணல் திருட்டில் யார் ஈடுபட்டாலும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இதற்கு அதிகாரிகள் மட்டுமல்ல பொதுமக்களும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றார்.

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் 2010-11 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு குறிப்பிட்ட சில இடங்களில் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முறையாக வழங்கப்படவில்லை என விவசாயி மாரியப்பன் பேசினார்.

இதற்கு பதிலளித்து கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் பாண்டியன் பேசுகையில், பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்துக்காக தூத்துக்குடி மாவட்டத்துக்கு ரூ. 9.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், ரூ.4.04 கோடி ரூபாய் இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

சில கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகளுக்கு முறையாக நிதி வழங்கப்படவில்லை என விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர். பயிர்க்காப்பீடு செய்ததற்கான ரசீது உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் வங்கிகள் மூலம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

உரிய ரசீது இல்லாதவர்கள் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரிடம் அடையாளச் சான்று வாங்கி வந்தால் நிதி வழங்கப்படும்.  வங்கிகளில் கணக்கு இல்லாதவர்களுக்கும் புதிதாக கணக்கு தொடங்கப்பட்டு நிதி வழங்கப்படும். மேலும், யார் யாருக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தை சம்பந்தப்பட்ட கூட்டுறவு வங்கிகளில் பட்டியலாகத் தயாரித்து ஒட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

22.02.2013 A.M

## வறட்சியால் நஷ்டம் நிவாரணம் வழங்க வேண்டும்பால் உற்பத்தியாளர்கள் கோரிக்கை

சின்னாளபட்டி: வறட்சியால் பசுந்தீவனம் கிடைக்காத நிலையில், செலவினம் அதிகரித்துள்ளது. பால் உற்பத்தியில் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்ட நிவாரணம் வழங்க வேண்டும் என பால் உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.உரிய காலத்தில் பருவ மழை பெய்து, விவசாயம் செழிப்பாக இருந்தால், கால்நடைகளுக்கு பசுந்தீவனம் தட்டுப்பாடின்றி தாராளமாக கிடைக்கும். தற்போது, சாகுபடி செய்த பயிர்கள் நீரின்றி, வயலில் காய்ந்து கருகும் அளவிற்கு வறட்சி தலைதூக்கியுள்ளது. மேய்ச்சலுக்கும், பசுந்தீவனத்திற்கும் வழியின்றி போய்விட்டது. மாடுகளுக்கு செயற்கை தீவனங்கள் எவ்வளவு கொடுத்தாலும், சிறிது நேரம் மேய்ச்சலில் உண்ணும் பசுந்தீவனத்திற்கு இணையாகாது. பால் கறவையும் அதிகரிக்காது. பட்டினியாக விட முடியாது என்பதால் வேறு வழியின்றி விலை கொடுத்து தீவனங்கள் வாங்கித்தர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இவையும், நாளுக்கு நாள் விலை அதிகரித்து வருகிறது.கறக்கப்படும் பாலுக்கு கிடைக்கும் விலையானது, தீவனம் மற்றும் கால்நடை பராமரிப்புக்கான செலவுகளை ஈடுகட்டும் அளவிற்கு கூட இல்லை. வறட்சியால், பால் உற்பத்தியாளர்கள், கால்நடை வளர்ப்போர் பாதிக்கப்பட்டுள்ளனர். பால் உற்பத்தியாளர்களுக்கும் நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## வேளாண்மை பணியில் நிலவும் ஆள்பற்றாக்குறை நவீன கருவிகள் விவசாயிகளுக்கு வினியோகம்

திண்டுக்கல்: மாவட்டத்தில், வேளாண் பணியில் நிலவி வரும் ஆள்பற்றாக்குறையை சமாளிக்க விவசாயிகளுக்கு, நவீன கருவிகளை மானியத்தில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.வேளாண் பணியில் நிலவிவரும் ஆள்பற்றாக்குறையை சமாளிக்க விவசாயிகளுக்கு அனைத்து விதமான பயிற்சிகளையும் வழங்குமாறு அரசு உத்தரவிட்டுள்ளது. சமீபகாலமாக வேளா ண் நிலங்களில் களை எடுப்பதில் இருந்து மருந்து தெளிப்பது வரை அனைத்து பணிகளுக்கும் கூலியாட்கள் கிடைப்பது அரிதாக உள்ளது. அப்படியே கிடைத்தாலும் அவர்களுக்கான கூலியிலிருந்து பணிகளுக்கான செலவு வரை அனைத்தையும் கணக்கிட்டால் லாபம் எதுவும் மிஞ்சாத நிலை

விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் பெரும்பாலான விவசாயிகள் தங்கள் விளைநிலத்தை அப்படியே தரிசாக விட்டு வைத்துள்ளனர். இதனால் உணவு பொருள் பற்றாக்குறையும், காய்கறிகள் வரத்து இல்லாததால் விலை ஏற்றமும் ஏற்படுகிறது. இதை தவிர்ப்பதற்காக அனைத்து விவசாயிகளுக்கும் களை எடுப்பதில் இருந்து மருந்து தெளிப்பது வரை அனைத்து விதமான பயிற்சிகளையும் முறைப்படி அளிக்குமாறு வேளாண் துறைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.திண்டுக்கல் மாவட்டத்தில் முதற்கட்டமாக வடமதுரை யூனியன் சித்துவார்பட்டியில் உள்ள விவசாயிகளுக்கு இதற்கான பயிற்சி அளிக்கப்பட்டது. சித்துவார்பட்டி பஞ்சாயத்து தலைவர் ஜமால் முகமது தலைமை வகித்தார். உதவி பொறியாளர் ரத்தினசபாபதி வரவேற்றார். காந்தி கிராம வேளாண் மை அறிவியல் மையத்தின் தொழில் நுட்ப அலுவலர் செந்தில் குமார், இளநிலை பொறியாளர் முனியப்பன், உதவி செயற்பொறியாளர் ராமசாமி, வேளாண் அலுவலர் மாயகிருஷ்ணன் பயிற்சி அளித்தனர்.

## ஒரேநாள் மழையில் தர்பூசணி விலை கிலோவிற்கு ரூ.7 சரிவு

தேனி: ஒரே நாள் மழையில், தேனியில் தர்பூசணி விலை கிலோவிற்கு 7 ரூபாய் குறைந்தது.திருவண்ணாமலை, கடலூர், காஞ்சிபுரம், திண்டிவனம், ஓசூர், திருப்பூர், தாராபுரம் பகுதிகளில் தர்பூசணி விளைச்சல் அதிகரித்துள்ளது. அங்கிருந்து தேனி மாவட்டத்திற்கு தர்பூசணி கொண்டு வரப்படுகிறது. வெயில் கடுமையாக இருந்ததால், தர்பூசணி கிலோ 15 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இந்நிலையில் இரு தினங்களுக்கு முன், மாவட்டம் முழுவதும் பலத்த மழை பெய்தது. நேற்று வெயில் அடித்தாலும் மழை பெய்யும் சூழ்நிலை இருந்தது. இதனை தொடர்ந்து, தர்பூசணி விலையில் சரிவு ஏற்பட்டது. ஒரு கிலோ தர்பூசணி விலை கிலோ 7 ரூபாய் குறைந்து 8 ரூபாய்க்கு தாராளமாக கிடைத்தது.

## "நெல்' தந்த சோகத்தை நீக்கியது "எள்'என்றுமில்லா விலையால் மகிழ்ச்சி

ஆர்.எஸ்.மங்கலம்: ஆர்.எஸ்.மங்கலம் ஒன்றியத்தில். மழையின்றி நெல் கைவிட்டாலும், கை தூக்கிவிடும் அளவிற்கு எள் விலை உச்சத்தை எட்டியுள்ளது. இது விவசாயிகளுக்கு, எல்லையில்லா மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்தாண்டு கூடுதலாக, 500 ஏக்கரில் எள் விதைப்பில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.ஆர்.எஸ்.மங்கலம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் நெல் விவசாயம் மழையின்றி கருகியது. இதை தொடர்ந்து சுற்றுப்புற பகுதிகளான செங்குடி, சீனாங்குடி, சேத்திடல், பூலாங்குடி, புல்லமடை உட்பட பல பகுதிகளில் கார்த்திகை பட்டத்தில் (டிசம்பர் மாதம்) எள் விதைப்பு செய்யப்பட்டது.தற்போது அறுவடையாகி, ஆர்.எஸ்.மங்கலம் கமிஷன் கடைகளில், கிலோ 75 ரூபாய்க்கு வாங்கப்படுகிறது. மேலும், இப்பகுதிகளில் தற்போது நல்ல மழை பெய்துள்ளது. அறுவடைக்கு பின் நெல் வயல்களில், எள் விதைப்பில்(மாசிபட்டம்)

விவசாயிகள் மும்முரமாக உள்ளனர். விதை கமிஷன் கடைகளில், பழைய எள் விதைகளை, கிலோ 120 ரூபாய்க்கு வாங்கி விதைத்து வருகின்றனர்.ஆர்.எஸ்.மங்கலம் விவசாயி முனியாண்டி கூறியதாவது: பெய்யது நெல் விவசாயத்தை கெடுத்தது மழை. தற்போது பெய்யும் சிறு மழை, எள்ளுக்கு உகந்தது. கடந்தாண்டுகளில் 1,500 ஏக்கரில் மட்டுமே எள் விதைப்பு நடந்தது. தற்போது கூடுதலாக 500 ஏக்கரில் விதைப்பு நடந்து வருகிறது. ஒரு ஏக்கருக்கு விதைப்பு முதல் அறுவடை வரை, 5,000 ரூபாய் செலவாகும். ஒரு ஏக்கரில் 300 கிலோ கிடைக்கும். 90 நாள் பயிரான எள் ஏப்ரல் இறுதி, மே முதல் வாரத்தில் அறுவடை செய்யும்போது, வரத்து அதிகமாக இருக்கும். கிலோ 20 ரூபாய் என விலை நிர்ணயித்து விடுவர் வியாபாரிகள். லாபம் ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் தான் கிடைக்கும். ஆனால், மாசிபட்ட அறுவடை விலையே, அப்போதும் இருந்தால், ஏக லாபம் தான், என்றார்.

## அணைகளில் இருந்து தண்ணீர் வழங்க வாய்ப்பே இல்லை தூத்துக்குடி மாவட்டத்தில் அட்வான்ஸ் கார்சாகுபடி செய்ய வேண்டாம்

தூத்துக்குடி: தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயிகள் அட்வான்ஸ் கார்சாகுபடி செய்ய வேண்டாம். அணையில் இருந்து அதற்கு தண்ணீர் வழங்க வழியில்லை. தயவு செய்து அட்வான்ஸ் கார் நெல் சாகுபடி செய்ய வேண்டாம் என்று விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் பொதுப்பணித்துறை அதிகாரி உருக்கமான வேண்டுகோள் விடுத்தார்.

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ஆஷீஷ்குமார் தலைமையில் நடந்தது. வேளாண்மை இணை இயக்குனர் ரஞ்சித்சிங் தன்ராஜ், பொதுப்பணித்துறை தாமிரபரணி வடிநில கோட்ட செயற்பொறியாளர் முத்துப்பாண்டியன், கலெக்டரின் நேர்முகஉதவியாளர் (வேளாண்மை) கனகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தாமிரபரணி வடிநில கோட்ட உதவி செயற்பொறியாளர் நம்பிராஜன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பாண்டியன், தோட்டக்கலை துணை இயக்குனர் ராஜகுமார், வேளாண் விற்பனைக்குழு அதிகாரி பாலசிங், விவசாய அதிகாரிகள் தாமஸ், ராஜா, சுற்றுச்சூழல் பொறியாளர் குமாரவேல், மாநகராட்சி இளநிலை பொறியாளர் சரவணன், அரசு போக்குவரத்துக்கழக கோட்ட மேலாளர் கண்ணபிரான் மற்றும் அரசுத்துறை அதிகாரிகள் விவசாய சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தை துவக்கி வைத்து கலெக்டர் பேசுகையில், தூத்துக்குடி மாவட்டத்திற்கு இன்னும் பத்து நாளில் கண்டிப்பாக தமிழக அரசின் உயர்மட்டக்குழு வந்து வறட்சியை பார்வையிடும். இதனால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிச்சயமாக நிவாரண உதவி கிடைக்கும். குழு வரும் போது விவசாயிகளுக்கு தெரிவிக்கப்படும். அவர்கள் வந்து குழுவிடம் பாதிப்பு விபரங்களை எடுத்துக் கூறலாம் என்றார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் பாசனத்திற்கு மணிமுத்தாறு அணையை திறக்க வேண்டும் என்று

விவசாயிகள் கூறினர். மழை பெய்யாமல் இருந்து வருவதால் குடிநீர் பிரச்னை நிச்சயமாக ஏற்படும் நிலை உள்ளது. இதனால் மணிமுத்தாறு அணைத் தண்ணீரை குடிநீருக்காக பாதுகாப்பாக வைக்க வேண்டியுள்ளது. இதனால் அந்த அணைத்தண்ணீரை பாசனத்திற்கு திறக்க முடியாது என்று கலெக்டர் தெரிவித்தார்.பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் முத்துப்பாண்டியன் பேசுகையில், பாபநாசம் அணையில் இருந்து ரெகுலராக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

மணிமுத்தாறு அணையின் மூலம் தண்ணீர் பெறுவதற்கு உரிமை இருப்பதால் தான் கேட்கிறோம். ஆனால் அதில் உள்ள ஒரு சொட்டு தண்ணீர் கூட தூத்துக்குடி மாவட்ட விவசாயத்திற்கு வழங்கப்படாமல் இருப்பது வேதனையாக இருப்பதாக விவசாய சங்க நிர்வாகி ராஜேந்திரன் குறிப்பிட்டார்.

விவசாயிகள் நகைக்கடன் மூலமாக பெற்ற பயிர்கடன் பிற பயிர்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்று விவசாய சங்க நிர்வாகி கணபதிராமன், பெருமாள், சித்தவன், ரெங்கசாமி, தமிழ்மணி மற்றும் பலர் வலியுறுத்தினர். இது சம்பந்தமாக ஜெ.ஆர் மூலம் அறிக்கை பெற்று அரசுக்கு சிபாரிசு செய்யப்படும் என்று கலெக்டர் தெரிவித்தார்.

மருதூர் அணைக்கட்டில் இருந்து தூத்துக்குடி மாநகராட்சிக்கு தண்ணீர் எடுப்பதால் விவசாயம் பாதிக்கப்படும்.

இதனால் ஸ்ரீவைகுண்டத்திற்கு கீழ் பகுதியில் தண்ணீர் எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் பெருமாள் தெரிவித்தார். இதற்கு பதில் அளித்த கலெக்டர், விவசாயத்திற்கு பாதிப்பு எதுவும் வராது. இதனால் மாவட்ட நிர்வாகமும் குடிநீருக்காக தண்ணீர் எடுக்க பரிந்துரைத்துள்ளது என்றார்.

பொதுப்பணித்துறை இ.இ முத்துப்பாண்டியன் கூறுகையில், இது சம்பந்தமாக அரசு மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எந்த காரணத்தை கொண்டும் விவசாயிகளுக்கு பாதிப்பு இல்லாத வகையில் மருதூர் அணைக்கட்டில் இருந்து குடிநீருக்கு தண்ணீர் எடுக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்றார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் அணையில் உள்ள தண்ணீரை வைத்து அட்வான்ஸ் கார்சாகுபடி செய்ய அனுமதி வழங்க வேண்டும். அதற்கு தண்ணீர் தர பொதுப்பணித்துறை உறுதி அளிக்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தினர். இதற்கு பதில் அளித்த இ.இ முத்துப்பாண்டியன் கூறுகையில், விவசாயிகள் தயவு செய்து அட்வான்ஸ் கார்சாகுபடி செய்ய வேண்டாம். அணைகளில் இருந்து அதற்கு தண்ணீர் வழங்க முடியாது. தண்ணீரும் கிடையாது. எந்த காரணத்தை கொண்டும் அட்வான்ஸ் கார்சாகுபடி செய்ய வேண்டாம் என்று விவசாயிகளை கேட்டுக் கொள்கிறோம் என்றார்.

கோவில்பட்டி பகுதியில் பருத்தி வாங்குவதற்கு ஆள் இல்லை. இதனால் பருத்தி போட்ட விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர். கலெக்டர் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

என்று விவசாய சங்க நிர்வாகி கிருஷ்ணசாமி கூறினார். இது சம்பந்தமாக உடனடி நடவடிக்கை எடுக்க வேளாண் வணிகத்துறைக்கு கலெக்டர் உத்தரவிட்டார்.

## அரசின் இலவச ஆடு குடற்புழு நீக்க முகாம்

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில், ஃபிப்ரவரி, 22, 23ம் தேதிகளில், அரசின் இலவச ஆடுகளுக்கான குடற்புழு நீக்க முகாம் நடக்க உள்ளதாக, கலெக்டர் சண்முகம் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: ஈரோடு மாவட்டத்தில் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 201 1-2 012ம் ஆண்டில், 3,775 பேருக்கு, 15,100 ஆடுகளும், 2012, ஏப்ரல் முதல், 2013, ஃபிப்ரவரி வரை, 4,246 பேருக்கு, 16,984 இலவச ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளது. அரசின் இலவச ஆடுகளின் நலனை காக்கும் வகையில், ஃபிப்ரவரி, 22, 23ம் தேதி காலை, ஈரோடு மாவட்டத்தில் வழங்கப்பட்ட அனைத்து ஆடுகளுக்கும் இலவசமாக குடற்புழு நீக்க முகாம் நடத்த கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆடுகள் வழங்கப்பட்ட அந்தந்த கிராமத்தில் குடற்புழு நீக்க முகாம் நடத்தப்படும். குடற்புழு நீக்கம் செய்வதன் மூலம் ஆடுகளின் உடல் கூடுவது மட்டுமின்றி நோய் எதிர்ப்பு சக்தி, இனவிருத்தி திறன் அதிகரித்து ஆடுகளின் மூலம் கிடைக்கும வருவாய் அதிகரிக்கும் என்பதால், பயனாளிகள் அனைவரும் கலந்து கொள்ளலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## மூன்று அடி முத்தூர் முருங்கை ஈரோட்டில் விற்பனைக்கு குவிப்பு

ஈரோடு: முத்தூர் சுற்று வட்டார பகுதிகளில், முருங்கை சீஸன் துவங்கியதால், வரத்து அதிகரித்துள்ளது. நகரில் பல இடங்களில் மூன்று அடி நீளம் கொண்ட முருங்கை காய் விற்பனை செய்யப்படுகிறது.
ஈரோடு மாநகரில் நேதாஜி காய்கறி மார்க்கெட், சின்ன மார்க்கெட், உழவர் சந்தைகள், சூரம்பட்டி, கருங்கல்பாளையம், சம்பத் நகர், காளை மாட்டு சிலை பகுதியில் சந்தை மற்றும் பிளாட்பார காய்கறி கடைகள் அமைந்துள்ளது.
ஆந்திரா, கோயம்பேடு, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், மேட்டுப்பாளையம், காங்கேயம், சத்தியமங்கலம், கோபி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் உற்பத்தியாகும் காய்கறிகள் ஈரோட்டுக்கு விற்பனைக்கு வருகிறது.
சாம்பார், அவியல் உட்பட சில பதார்த்தங்களுக்கு அதிகம் பயன்படுத்தும், முருங்கைகாய்கள், ஆந்திராவில் இருந்து செடி முருங்கையும், ஈரோட்டில் முத்தூர் சுற்றுவட்டார பகுதியில் மரங்களில் வளர்க்கப்படும் முருங்கை காய்களும் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.
தட்டுப்பாடான சமயங்களில் காய் ஒன்று, 10 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது.
ஆந்திராவில் இருந்து வரும் செடி முருங்கை காய்கள் வீரிய ஒட்டுரக காய்கள் ஆகும்.

இவ்வகை முருங்கை காய்கள், நான்கடி நீளம் வரையிலும் இருக்கக்கூடும். வீடுகள், தோட்டத்தில் வளர்க்கப்படும் முருங்கை காய்கள், முக்கால் அடி முதல் ஒன்றரை அடி நீளம் வரையிலும் சாம்பல் பூசினார் போல காணப்படும். மரத்தில் அதிகமாக விளையக்கூடிய காய்களை வாங்கி பயன்படுத்துவர். கடந்த சில நாட்களாக, ஈரோடு நகரில், மூன்றடி நீளம் கொண்ட முருங்கை காய்கள் மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வந்துள்ளது. பொதுமக்கள் அதிகம் விரும்பி வாங்கிச்செல்கின்றனர்.

இதுபற்றி முருங்கைகாய் வியாபாரி ராஜம்மாள் கூறியதாவது:

முத்தூர் சுற்றுவட்டார பகுதியில் விளைந்த காய்கள் விற்பனைக்கு வந்துள்ளது. வழக்கமாக ஒரு அடி நீளமுள்ள காய்கள் விற்பனைக்கு வரும். தற்போது மூன்றடி நீள காய்கள் வந்துள்ளது. 100 காய் கொண்ட கட்டு, 200 ரூபாய்க்கு விவசாயிகள் விற்கின்றனர். சில்லறை விலையில் காய்க்கு தக்கப்படி 5, 4 மற்றும், 3 ரூபாய்க்கு விற்கிறோம்.மாசி மாதம் துவங்கி ஆடி மாதம் வரையில் கோடையில் முருங்கை சீஸன் ஆகும். மழை காலம் துவங்கினால், பூ உதிர்ந்து, பூச்சி வைக்க துவங்கி உற்பத்தி பாதிக்கும், என்றார்.

## வெள்ளரியில் அதிக மகசூல் பெறும் வழி

வாலாஜாபாத்:வெள்ளரி உயர் ரகதொழில் நுட்பத்தை பயன்படுத்தி அதிக மகசூலை பெறலாம் என, தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் அனிலா கிங்ஸி தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறியதாவது:

கோ.1, ஜப்பான் லாங்கிரீன், பிரியா, அர்ஷா, பாயின்சிட், சிலைட்-8, லக்கி ஸ்ரைக், டேலிசேஷா, ஆகிய ரக விதைகளை விதைப்பு செய்யலாம். சாதாரண விதையாக இருந்தால் ஒரு ஹெக்டேருக்கு 2.5 கிலோ விதை தேவைப்படும். அதுவே ஹைபிரிட் விதையாக இருந்தால், 300 கிராம் விதை போதுமானது.

இந்த விதைகளை 1.6 மீட்டருக்கு 0.6 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும். 30 செ.மீ நீளமும் 30 செ. மீட்டர் ஆழமும் உள்ள 11,000 குழிகளை எடுத்துக் கொள்ளவேண்டும். ஒவ்வெரு குழியிலும், இரண்டு கிலோ மக்கிய தொழுஉரத்தை இடவேண்டும்.அந்த உரத்துடன் ஐந்து கிராம் பியூரிடான் அல்லது எறும்பு பவுடரை மக்கிய தொழுஉரத்தில் கலக்க வேண்டும். ஒவ்வெரு குழியிலும் ஐந்து எண்ணிக்கையில் விதைகளை போடவேண்டும்.முளைப்பிற்கு பின் 30 வது நாளில், 150 கிலோ தழைசத்து, 75 கிலோ மணிசத்து, 75 சாம்பல் சத்து அடங்கிய மேலுரங்களை இடவேண்டும்.பழப்பூச்சி தாக்குதலில் இருந்தும் மற்றும் பழஈக்களின் தாக்குதலில், பாதுகாக்க இனிடோபுளோரைட் இரண்டு மில்லி அளவுள்ள மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்கவேண்டும்.

சாம்பல்நோய் தாக்குதல் நேரத்தில் டைனேட்டர் 0.5 மில்லி அளவுள்ள மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும் அல்லது 0.5 மில்லி கார்பன்ஷிமை ஒரு லிட்டர்

தண்ணீரில் கரைத்து தெளிக்கலாம்.

பெண்பூக்கள் அதிகமாக எடுக்கும் நேரங்களில் ( இரண்டு இலைப்பருவம்) பியனேடாக்ஸ் 100 மில்லி மருந்தினை தெளிக்க வேண்டும்.

இம்முறைகளை முறையாக பின்பற்றினால், 90 நாட்களில் ஒரு ஹெக்டேருக்கு 25 டன் வரையில் வெள்ளரி அறுவடை செய்யலாம்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## கால்நடைகளுக்கு சிறப்பு மருத்துவ முகாம்: கலெக்டர்

நாமக்கல்: "விலையில்லா கறவை மாடு வழங்கிய கிராமங்களில், இன்றும், நாளையும், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், சிறப்பு மருத்துவ முகாம் நடக்க உள்ளது' என, மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை:

நாமக்கல் மாவட்டத்தில், 2011-2012ம் ஆண்டு, 100 கறவை மாடு, 11 ஆயிரத்து, 624 வெள்ளாடுகளும் வழங்கப்பட்டன. அதுபோல், 2012-2013ம் ஆண்டு, 100 கறவை மாடு மற்றும், 3,574 பயனாளிக்கு, 14 ஆயிரத்து, 296 வெள்ளாடுகளும் வழங்கப்பட்டுள்ளன. அதன் மூலம், 12 ஆயிரத்து, 526 குட்டிகள் பெறப்பட்டுள்ளன.

அவ்வாறு வழங்கப்பட்ட விலையில்லா கறவை மாடு, ஆடுகளுக்கு, கால்நடை பராமரிப்புத்துறை டாக்டர்கள், அலுவலர்கள் மூலம், கிராமங்களில், மாதந்தோறும் சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, இன்றும், நாளையும், விலையில்லா கறவை மாடு வழங்கிய கிராமங்களில், சிறப்பு மருத்துவ முகாம் நடக்க உள்ளது.

முகாமில், இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த பயனாளிகள், தங்கள் கால்நடையை முகாமிற்கு அழைத்து வந்து, மருத்துவ சிகிச்சை பெற்றுச் செல்லலாம். சிறந்த முறையில் கால்நடை பராமரிக்கும் பயனாளிகளுக்கு, கடந்த ஆண்டைப் போல், இந்தாண்டும் சிறப்பு பரிசு வழங்கப்பட உள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தக்காளி விலை தொடர் சரிவு: விவசாயிகள் கலக்கம்

தர்மபுரி: தக்காளிவரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி, நல்லம்பள்ளி, பென்னகாரம், பாலக்கோடு, காரிமங்கலம், அரூர் உள்பட மாவட்டம் முழுவதும், தக்காளி, 20 ஆயிரம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பென்னாகரம், பாலக்கோடு, காரிமங்கலம் ஆகிய பகுதிகளில் உற்பத்தியாகும் தக்காளிகளை விவசாயிகள் பாலக்கோடு தக்காளி மார்க்கெட்டில் விற்பனை செய்து வருகின்றனர்.

இங்கிருந்து, சென்னை, கோவை, திண்டுக்கல், வத்தலகுண்டு, மதுரை மற்றும் நெல்லை, கேரளா ஆகிய பகுதிகளுக்கு வியாபாரிகள் தக்காளியை வாங்கி செல்கின்றனர். கடந்த, சில தினங்களாக தர்மபுரி மாவட்டம் உட்பட மாநிலம் முழுவதும் தக்காளி சாகுபடி செய்யப்பட்ட பகுதிகளில், தக்காளி உற்பத்தி அதிகரித்து, சந்தை விற்பனைக்கு, வரும் தக்காளியின் அளவு உயர்ந்துள்ளது. மேலும், கடந்த சில தினங்களாக தென்மாவட்டங்களிலும் தக்காளி உற்பத்தி அதிகரித்துள்ளதால், அப்பகுதிகளுக்கு தக்காளி விற்பனைக்கு அனுப்பப்படுவது பெரும் அளவு குறைந்துள்ளது.இதனால், பாலக்கோடு தக்காளி மார்க்கெட்டில் கடந்த சில தினங்களாக தக்காளி விலை கடும் சரிவை கண்டு வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். தக்காளி விவசாயி மாதேஸ் கூறியது:

பாலக்கோடு தக்காளி மார்கெட்டுக்கு கடந்த, 10 நாட்களுக்கு முன் நாள் ஒன்றுக்கு, 2 ஆயிரத்து, 500 முதல், 3 ஆயிரம் கூடைகள் மட்டும் தக்காளி வந்து கொண்டிருந்தது. தக்காளி விளைச்சல் அதிகரித்ததை தொடர்ந்து கடந்த சில தினங்களாக சந்தைக்கு, 4 ஆயிரம் கூடைகள் முதல், 5 ஆயிரம் தக்காளி கூடைகள் விற்பனைக்கு வருகிறது.கடந்த, 10 தினங்களுக்கு முன், 18 கிலோ எடை கொண்ட தக்காளி கூடை ஒன்று, 100 முதல் 130 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. கடந்த, ஒரு வாரமாக, 18 கிலோ எடை கொண்ட தக்காளி கூடை, ஒன்று, 40 முதல் 50 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.வரும் நாட்களில் தக்காளி வரத்து மேலும் அதிகரிக்கும் நிலையுள்ளதால் சந்தையில் விலை குறையும் அபாயம் உள்ளது. இதனால் தக்காளி விவசாயிள் கவலை அடைந்துள்ளனர்.

இவ்வாறு கூறினார்.

### தர்மபுரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் புளி ஏலம் துவக்கம்

தர்மபுரி: தர்மபுரி ஒழுங்குமுறை விற்பனை கூட்டத்தில் புளி ஏலம் நேற்று முன்தினம் துவங்கியது. தமிழக அளவில் புளி உற்பத்தியில் தர்மபுரி மாவட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. மாவட்டத்தில், ஆயிரத்து, 300 ஹெக்டேர் அளவில் புளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. புளி சீசன் கடந்த சில தினங்களுக்கு முன் துவங்கியது.

அறுவடை செய்த புளிகளை விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் தரம் பிரித்து விற்பனைக்கு தயார் படுத்தி வந்தனர். தர்மபுரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடத்தப்படும் புளி ஏலத்தில் விவசாயிகளுக்கு, உரிய விலை கிடைத்து வந்தது.இந்தாண்டு, சற்று முன்னதாகவே புளி உற்பத்தி துவங்கியதை அடுத்து விவாயிகள் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் புளி ஏலத்தை நடத்த வேண்டுகோள் விடுத்தனர். விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று நேற்று முன்தினம் (ஃபிப்.,20) முதல் புளி ஏலம் துவங்கியது.

விவசாயிகள் 17 டன் தொட்டுப்புளி மற்றும், நான்கு டன் தட்டு புளி விற்பனைக்கு கொண்டி வந்தனர். தொட்டு புளி, ஒரு கிலோ, ஒன்பது ரூபாய் முதல், 11 ரூபாய், 50 பைசாவுக்கும், தட்டு

புளி, ஒரு கிலோ, 38 ரூபாய் முதல், 40 ரூபாய்க்கும் வியாபாரிகள் வாங்கி சென்றனர்.இது குறித்து தனிஅலுவலர் செல்வம் கூறியது:
தர்மபுரி மாவட்டத்தில் இந்தாண்டு புளி வரத்து முன்னதாகவே துவங்கியுள்ளது. விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று மாவட்ட நிர்வாகம், தர்மபுரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று முன்தினம் முதல் புளி ஏலத்தை நடத்த உத்தரவிட்டது.புளி சீசன் வரை வாரந்தோறும் புதன் கிழமைகளில் தர்மபுரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் புளி ஏலம் நடக்கும். இதில், விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் கலந்து கொண்டு இடைதரகர்கள் இன்றி பயன் பெறலாம். இவ்வாறு அவர் கூறினார்.ஒழுங்குமுறை விற்பனை கூட செயலாளர் முருகேசன், கண்காணிப்பாளர் கிருஷ்ணன், மேற்பார்வையாளர் சுதர்சன் உள்ளிட்ட அலுவலர்கள் ஏலத்தை பார்வையிட்டனர்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

22.02.2013 A.M

## கோடையை கருத்தில் கொண்டு நீராதாரங்களை பராமரிக்க பஞ்.தலைவர்களுக்கு?உத்தரவு

மதுரை, : கோடையை கருத்தில் கொண்டு பஞ், தலைவர்கள் தங்கள் பகுதிகளில் குவிநீர் வழங்கும் நீராதாரங்களை அசுத்தமின்றி பராமரித்து பாதுகாக்க வேண்டுமென மதுரை கலெக்டர் அன்சுல் மிஸ்ரா வேண்டுகோள் விடுத்தார்.

மதுரை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் கோடையில் ஏற்படும் குடிநீர் தட்டுப்பாட்டை சமாளிப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மதுரையில் நடந்தது.

மாவட்டத்தின் அனைத்து பஞ்.தலைவர்கள் பங்கேற்ற கூட்டத்தில் கலெக்டர் அன்சுல் மிஸ்ரா பேசியதாவது:

பொது குழாய்களில் இருந்து தண்ணீர் வீணாக வெளியேறுவதை தடுக்க வேண்டும்.

டேப்பிலிருந்து தண்ணீர் வீணாகாமல் பார்க்க வேண்டும். மேல்நிலைத் தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி, கைபம்பு, சின்டெக்ஸ் தொட்டி ஆகியவற்றின் நீரை வெளியேற்றி கால்நடைகள் குளிப்பாட்டுதல், துணிகள் துவைத்தல் செய்யக்கூடாது. வீட்டு குடிநீர் இணைப்பில் மின்மோட்டார் பொருத்தி தண்ணீரை உறிஞ்சக்கூடாது.

தொட்டிகளில் அளவுக்கதிகமாக நீரை ஏற்றி வீணடிக்கக் கூடாது. இருக்கும் தண்ணீருக்கு ஏற்ப செயல்திட்டம் தயாரித்து குடிநீர் விநியோகம் செய்ய வேண்டும்.

திறந்தவெளி கிணறுகளில் இருந்து தண்ணீர் எடுத்து லாரிகளில் விற்பனை நடந்தால் தடுக்க வேண்டும். குடிநீர் வழங்கும் நீராதாரங்களை அசுத்தமின்றி பராமரிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

## திடீர் மழையால் விபரீதம் நெற்பயிர்களை?அறுவடை?செய்வதில்?சிக்கல் விவசாயிகள் கலக்கம்

தொண்டி, :  கடும் வறட்சிக்கு மத்தியில் விளைவிக்கப்பட்ட நெற்பயிர்கள், கடந்த சில நாட்களாக பெய்துவரும் மழையால் நனைந்துள்ளன. அறுவடை இயந்திரங்கள் ஈரநிலத்தில் செல்ல முடியாததால், அறுவடை பணியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

திருவாடானை தாலுகாவில் சுமார் 45 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில் நெற்பயிர் விவசாயம் நடைபெறுகிறது. இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை பொய்த்துவிட்டது.

இதனால் திருவாடானை தாலுகாவில் பயிர்கள் தண்ணீர் கிடைக்காமல் கருகின. சில பகுதிகளில் கண்மாய் மற்றும் குளங்களில் தேங்கிய தண்ணீர்மூலம் விவசாயப் பணிகள் தொடரப்பட்டது. தேவையான நேரத்தில் மழை பெய்யாமல், காலம் கடந்து கடந்த சில நாட்களாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது.

இந்த மழை விவசாயிகளுக்கு மேலும் சிரமத்தை அளித்துள்ளது. நேற்று முன்தினம் இரவு தொண்டி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் கனமழை பெய்தது. தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகள் மிகவும் சிரமப்பட்டு விளைவித்த நெற்பயிர்கள் அறுவடை செய்யவேண்டிய நிலையில் மழைநீர் பட்டு பாதிப்படைந்துள்ளன.

சில இடங்களில் பயிர்கள் தண்ணீரில் மிதந்தன. மேலும் வயல்வெளியில் தண்ணீர் தேங்கி கிடப்பதால், இயந்திரம் மூலம் பயிர்களை அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வயல்வெளியில் தண்ணீர் காய்ந்தபிறகே, இயந்திரம் மூலம் அறுவடை செய்ய முடியும். இதனால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

இதுகுறித்து முகிழ்தகத்தை சேர்ந்த விவசாயி முருகேசன் கூறுகையில், `பருவமழை பொய்யாமல் விவசாய பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் அறுவடை நேரத்தில் மழை பெய்ததால் மேலும் சிரமத்தை சந்திக்கும்நிலை ஏற்பட்டுள்ளது. இப்பகுதியில் பெய்துவரும் மழையால், வயல்வெளியில் அறுவடை இயந்திரத்தை இறக்க முடியவில்லை. இதனால் அடுத்த சில நாட்களுக்கு பிறகே அறுவடை செய்ய முடியும். அதற்குள் விளைந்த பயிர்கள் முளைத்துவிடுமோ என்ற அச்சத்தில் உள்ளோம் என்றார்.

மற்றொரு விவசாயி கூறுகையில், `மழை உரிய காலத்தில் பெய்யாமலும், தேவையற்ற நேரத்தில் பெய்தும் கெடுக்கிறது. கடந்த சில நாட்களாக பெய்துவரும் மழையால் கலக்கம் அடைந்துள்ளோம். விவசாய தொழிலாளர்கள் கிடைப்பதிலும் சிரமம் நிலவுவதால் விவசாயிகளின் நிலைமை மோசமாகிவிட்டது என்றார்.

## பார்த்தீனிய செடிகளை கட்டுப்படுத்துவது எப்படி? வேளாண் துறை ஆலோசனை

தேவாரம், : பார்த்தீனிய செடிகளை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்துவது குறித்து வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.

பார்த்தீனிய செடி வெப்ப மண்டலத்தில் வள ரும் ஒருவித செடியாகும். இச்செடியில் உற்பத்தியா கும் விதை அதிக நாட்கள் உறக்க நிலையில் இருக்கும் பண்புடையது. அளவில் சிறியதாக இருக்கும் இச்செடியின் விதையானது காற்றில் அதிக தூரம் பரவக்கூடியது. ஒரு செடியில் இருந்து ஒரு வருடத்தில் சுமார் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் விதைகள் வரை பரவும் தன்மையுடையது. இந்த விதைகள் முதிர்ச்சி அடையாத பருவத்திலும் முளைக்கும் தன்மை உடை யது.

கடுமையான கோடைகாலத்தில் இச்செடி கருகியது போன்ற தோற்றமளிக்கும். ஆனால், மழைக்காலத்தில் செடி நன்கு வளர்ந்திருக்கும். மேலும், ஒரு வருடம் முழுவதும் பூக்கும் தன்மை உடையது. பார்த்தீனிய செடிகளால் மனிதர்கள், கால்நடைகள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றன. சுவாசக் கோளாறு ஏற்படும் வாய்ப்பு அதிகமுள்ளது. இதனை கட்டுப்படுத்தும் முறை குறித்து வேளாண் துறையினர் கூறியதாவது:

பார்த்தீனிய செடிகளை பூப்பதற்கு முன்பே கையினால் பிடுங்கி அழித்து விடலாம். பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள அனை வரும், ஒன்று சேர்ந்து ஒரே சமயத்தில் அழித்தால் அதிகளவில் முழுமையாக கட்டுப்படுத்த முடியும். இந்த செடி மூலம் அதிகளவில் நிலம் பாதிக்கப்பட்டிருந் தால் பயிர் சுழற்சி முறையில் செண்டு மல்லிகை பூச்செடி யை பயிர் செய்வதன் மூலம் இதன் வளர்ச்சியை கட்டுப்படுத்தலாம். தரிசு நிலங்கள், இருப்பு பாதைகள், சாலையோரங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் உள்ள பார்த்தீனிய செடிகளை கட்டுப்படுத்த 1 லிட்டர் தண்ணீரில் 200 கிராம் அளவில் உப்பை கரைத்து செடிகளின் மீது தெளிக்க வேண்டும். களைக்கொல்லிகளை உரிய முறையில் பயன்படுத்துவதன் மூலம் பெருமளவு பார்த்தீனிய செடிகளை குறைக்கலாம். பார்த்தீனிய செடி அதிகளவில் விதைகளை உற்பத்தி செய்யக்கூடியது. எனவே, இச்செடிகளை சேகரித்து ஊட்டமேற்றிய உரமாக மாற்றி பயன்படுத்தலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## பயிர் பாதுகாப்பிற்கு விதை நேர்த்தி அவசியம்

விருதுநகர், : பயிர்களை பாதுகாக்க விதை நேர்த்தி செய்வதன் அவசியம் குறித்து வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.

பயிர்களில் விதை மூலம் பரவக்கூடிய பூஞ்சான் நோய்களிலிருந்து பாதுகாக்க விதையுடன் பூஞ்சான மருந்து கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

விதை மூலம் பரவும் இலைப்புள்ளி, இலைக்கருகல், இலை அழுகல் மற்றும் குலை நோய் போன்ற பூஞ்சான நோய்களை தடுக்க 1 கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் கார்பன்டைசிம் கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பின் விதைக்க வேண்டும்.

இல்லாவிட்டால் 1 கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் டிரைக்கோ டெர்மாவிருடி அல்லது 1 கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் சூடோமோனாஸ் ப்ளாரசன்ஸ் என்ற உயிரியல் பூஞ்சான மருந்தை விதைப்பதற்கு முன் கலந்து விதைக்க வேண்டும்.

ஒரு ஏக்கர் விதைக்க தேவையான விதைக்கு, விதை நேர்த்தி செய்ய ரூ.10 முதல் ரூ.20 வரை செலவாகும். விதை நேர்த்தி செய்வதால், பயிர் வளர்ச்சி காலத்தில் நோய்கள் தாக்கி, அவற்றை கட்டுப்படுத்த மருந்திற்கு செலவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது.

நெல், சிறுதானியங்கள், பருத்தி, கரும்பு, எள் மற்றும் சூரியகாந்தி பயிர்களுக்கு விதைநேர்த்தி செய்ய 1 ஏக்கர் விதைக்கு, அசோஸ்பைரில்லம் 1 பாக்கெட்டை ஆறிய வடிகஞ்சியில் கலந்து அதனுடன் பூஞ்சான விதை நேர்த்தி செய்த விதையை கலந்து நிழலில் 30 நிமிடம் உலர்த்தி பின்பு விதைக்க வேண்டும்.

நிலக்கடலை மற்றும் பயிறு வகைகளுக்கு விதை நேர்த்தி செய்வதற்கு 1 ஏக்கர் விதைக்கு ரைசோபியம்கல்ச்சர் 1 பாக்கெட் டை ஆறிய வடிகஞ்சியில் கலந்து அதனுடன் பூஞ்சான விதை நேர்த்தி செய்த விதையைக் கலந்து நிழலில் 30 நிமிடம் உலர்த்தி பின் விதைக்க வேண்டும். உயிர் உர விதை நேர்த்தி செய்வ தால், உயிர் உரங்கள் காற்றி லுள்ள தழைச்சத்தை கிர கித்து பயிருக்கு கொடுக்கும்.

அதனால் இளம் பயிரின் இலைகள் கரும்பச்சை நிறத்துடன் செழிப்பாக வளரும். பயிர்கள் வறட்சியை தாங்கி வளர்ந்து, கூடுதல் மகசூல் கொடுக்கும். இதனால் கால் பங்கு தழைச்சத்து இடுவதை குறைக்கலாம். அதன்மூலம் உரச் செலவை குறைக்க லாம். எனவே விவசாயி கள் பூசன கொல்லி விதை நேர்த்தி செய்து பயிர்களை நோய்களிலிருந்து வருமுன் காக்க வேண்டும். இதுதொடர்பான கூடுதல் விபரங்களுககு வேளாண் அலுவலகத்தை விவசாயிகள் அணுகலாம் என வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம்

திண்டுக்கல், : வத்தலக்குண்டு வட்டார விவசாயிகள் பட்டறிவுப்பயணமாக பெரியகுளம் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், சோத்துப்பாறை  வனத்துறை அலுவலகத்திற்கும் அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு  மண்பரிசோதனை, பசுமை குடில் பயிர்கள், முருங்கை சாகுபடி, காய்கறி,

பழங்களின் உயர்தெழில்நுட்பங் கள், தேக்கு, குமிழ், மலை வேம்பு, மூங்கில் உள்ளிட்ட மர வளர்ப்பு முறை குறித்து விளக்கிக் கூறப்பட்டது. வயல்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு வயல்வெளி பிரச்னைகள் குறித்து விஞ்ஞானிகளுடன் விவாதித்து சந்தேகங்களை நிவர்த்தி செய்தனர். ஏற்பாடுகளை வத்தலக்குண்டு வேளாண் மை உதவி இயக்குநர் கோ பால்ராஜ் செய்திருந்தார்.

## விளைநிலங்களில் புகுந்து அட்டகாசம் யானைகளை விரட்ட போராடும் விவசாயிகள்

களக்காடு : களக்காடு அருகே நள்ளிரவில் விளைநிலங்களுக்குள் புகுந்த காட்டு யானைகள் கூட்டத்தை விவசாயிகள் தீப்பந்தம் காட்டி விடிய விடிய விரட்டும் பணியில் ஈடுபட்டனர். நெல்லை மாவட்டம் களக்காடு புலிகள் காப்பக மலையடிவார கிராமங்களில் கடந்த 3 மாதங்களாக காட்டு யானைகள் நடமாட்டம் காணப்படுகிறது. கடந்த ஒரு வாரமாக யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. யானைகள் விளைநிலங்களுக்குள் புகுந்து வாழை, தென்னை, பனை மரங்களை வேரோடு பிடுங்கி எறிந்து வருகின்றன.

தற்போது யானைகள் கோழிகால் மலையடிவார பகுதியில் முகாமிட்டுள்ளன. இவைகள் இரவு நேரங்களில் சிதம்பரபுரம் பகுதியில் உள்ள விளைநிலங்களுக்கு புகுந்து வருகின்றன. இதனை தடுக்க விவசாயிகள் கடந்த 3 நாட்களாக இரவு நேரங்களில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் இரவு வழக்கம் போல் விவசாயிகள் வழக்கம் போல் காவல் பணியில் ஈடுபட்டிருந்தனர். நள்ளிரவில் ஒரு குட்டி உட்பட 6 யானைகள் மேல்கரையில் உள்ள விளைநிலங்களுக்குள் புகுந்தன.

இதையடுத்து விவசாயிகள் தீப்பந்தகளை காட்டியும், வெடிகளை வெடித்தும் அவைகளை விரட்டினர். ஆனாலும் யானைகள் காட்டுக்குள் செல்லாமல் மலையடிவார பகுதிகளில் புதர்களில் பதுங்கி உள்ளன. இதனால் விடிய, விடிய விவசாயிகள் விளைநிலங்களை கண்காணித்தபடி இருந்தனர். இது குறித்து விவசாயிகள் கூறுகையில், “யானை கூட்டத்தில் குட்டி காணப்படுவதால், யானைகளை விரட்டுவதில் சிரமம் ஏற்படுகிறது.

சில நேரங்களில் குட்டியை பாதுகாக்கும் யானைகள் ஆக்ரோஷத்துடன் எங்களை விரட்டுகின்றன. வங்கிகளில் கடன் வாங்கியும், நகைகளை அடகு வைத்தும் விவசாயம் செய்து வருகிறோம். இந்நிலையில் விவசாய பயிர்களை யானைகளிடமிருந்து காப்பாற்றுவது பெரும் போராட்டமாக

உள்ளது. வனத்துறையினரிடம் புகார் தெரிவித்துள்ளோம். ஆனால் அவர்கள் சம்பவ இடத்திற்கு வருவதில்லை“ என்றனர்.

## முட்டை விலை 373 காசுகளாக நிர்ணயம்



நாமக்கல் : நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடைபெற்றது. இதில் முட்டை விலை 3 காசு உயர்த்தப்பட்டு 373 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாமக்கல் மண்டல கோழிப்பண்ணை வரலாற்றில் இதுவே அதிகபட்ச விலையாகும்.

இந்த விலை உயர்வு குறித்து நாமக்கல் கோழிப்பண்ணையாளர்கள் சம்மேளன செயலாளர் இளங்கோ கூறுகையில், ‘தற்போது வெப்பம் அதிகரித்துள்ளதால் பண்ணைகளில் முட்டை உற்பத்தி குறைந்து வருகிறது. தீவன விலையேற்றத்தால் பண்ணையாளர்கள் வயதான கோழிகளை விற்று வருகிறார்கள். இதனால், முட்டை உற்பத்தி குறைந்துள்ளது. முட்டை தேவை அதிகரித்து வருவதால் விலை உயர்த்தப்பட்டுள்ளது. இந்த விலை மேலும் உயர வாய்ப்பு உள்ளது’ என்றார்.